***வருகின்ற 2018-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02-ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.***

1. இந்நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 2018-19 ஆம் ஆண்டு முதல் குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ள ஏலம் போகாத இனங்களை மறு ஏலம் 02.08.2018 -ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட இனத்திற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | குத்தகை இனம் | உயர்ந்து பட்ச ஏலக்கேள்வி கோரியவர் பெயர் மற்றும் முகவரி ஒப்பந்தப்புள்ளி தொகை | மூன்றாண்டு சராசரி | 2017-18 குத்தகை தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஆடு அடிக்கும் தொட்டியில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் (727 ச.அடி) | திரு.வெங்கடாச்சலம், பவானி ரூ. 47000/- | ரூ. 42033/- | ரூ. 44100/- |

1. மேற்கண்ட இனத்திற்கு கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை மூன்றாண்டு சராசரி மற்றும் சென்ற ஆண்டு குத்தகைத் தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு 2018-19 முதல் 2020-2021 வரை மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகை உரிமம் வழங்குவது குறித்து மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

2. அரசு ஆணை எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( ந.நி4) துறை, நாள்: 19.09.2008-ன்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி/ ஒப்பந்தப்புள்ளி தொகை கோரிய குத்தகை இனத்திற்கு குத்தகைத் தொகை மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து பட்டியலிடப்பட்டுள்ளது. இதன்படி உரிய காலக்கெடுவில் குத்தகை தொகையை செலுத்தி குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்வது குறித்து மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| குத்தகை இனம் | 2018-19 ஆம் ஆண்டு குத்தகை | 2019-20 ஆம் ஆண்டு குத்தகை | 2020-ஆம் ஆண்டு குத்தகை |
|---|---|---|---|
| ஆடு அடிக்கும் தொட்டியில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | ரூ.47000/- | ரூ.49350 | ரூ.51818 |

நிபந்தனைகள்:

1. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மேற்கண்ட இனத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் பொது ஏலத்தில் விடப்படும்.
2. மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வினத்தை பெறவும் வாரிசுதாரர்களுக்கு விருப்பமில்லை எனில் உரிமை ஏலம் விடப்படும்.
3. சேவை வரி, வருமான வரி தொழில்வரி ஆகியவற்றினை குத்தகைத் தொகையில் கழித்துக் கொள்ள இயலாத இதனை உடன் செலுத்தப்பட வேண்டும்.
4. 2018-19 -ம் ஆண்டு குத்தகை பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை மீறி நடந்தால் குத்தகை உரிமம் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படுவதுடன் அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு குத்தகைதாரர் பொறுப்பாவார்.

அவசர அவசியத்தினைக் கருதி மேற்கண்ட நிபந்தனைகளுடன் உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1707/2017/ அ2)

2. பவானி நகராட்சி குடிநீர் விநியோகப்பணிக்காக நகராட்சிக்குட்பட்ட அனைத்து சாலைகளையும் contour suvery செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.35 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 211 நாள்: 09.07.2018 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 01.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு. என்.ரமேஷ் குமார் Basic Line Digital Survey Erode | 0.14% | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. A. விமல், Digital Survey Erode | 0.46 % | சதவிகிதம் மதிப்பீட்டு விகித்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.14% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. என். ரமேஷ்குமார், Basic Line Digital survey அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ஓம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பவானி நகராட்சி

**வருகின்ற 2018-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

1. பவானி நகராட்சி பகுதியில் உள்ள காவேரி மற்றும் பவானி ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் பாதிப்பாடைந்துள்ள வார்டு பகுதிகளில் வெள்ள நிவாரணப்பணிகள் மற்றும் துாய்மை பணிகள் மேற்கொள்ள திருப்பூர் மண்டலத்திற்கு உட்பட்டுள்ள உடுமலைப்பேட்டை, தாராபுரம், காங்கேயம், பல்லடம் மற்றும் புஞ்சை புளியம்பட்டி நகராட்சிகளிலிருந்த டிப்பர் லாரிகள், ஒரு மினி ஆட்டோ மற்றும் கழிவு நீர், அகற்றும் வாகனங்களுடன் இரு துப்புரவு ஆய்வாளர், இரு துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் 50 துப்புரவு பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு துப்புரவுப்பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வெளி நகராட்சியிலிருந்து பணி மேற்கொள்ளும் வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் இந்நகராட்சியிலிருந்து வழங்க வேண்டியுள்ளது. மேலும் வெள்ளம் பாதித்த வார்டு பகுதிகளான 2,4,7,8,9,10,12,13,17,18,19,22,23,24,25,26 மற்றும் 27 பகுதிகளுக்கு நோய் தொற்று ஏற்படா வண்ணம் தொடர்ந்து கிருமி நாசினிகள், பிளீச்சிங் பவுடர், மற்றும் பினாயில் போன்றவற்றை அவசர அவசியம் கருதி தொடர்ந்து வாங்கி கொள்ளவும், அப்பகுதியில் கொசுக்களால் பரவும் நோய்களான மலேரியா, மற்றும் டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்க தொடர்ந்து புகை மருந்து தெளிக்க தேவையான எரிபொருள் மற்றும் வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் போன்றவைகளை தேவைக்கேற்ப அவ்வப்போது நகராட்சி Indent மூலம் பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சிக்கு சொந்தமான இதுவரை ஏலம் போகாத கடைகளுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 27.06.2018-ல் ஏலம் கோர 07.06.2018-ல் தினத்தந்தி நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கான தொகை ரூ.6426/- வழங்க Brigth Advertising லிருந்து ( பில் நம்பர். 4314, நாள் 07.06.2018) வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1707/2017/அ2)

3. அரசு ஆணை எண். 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 19.07.2018-ல் 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% மிகாமலும் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசு ஆணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 26.07.2018 ல் ஏற்கனவே வழங்கப்பட்ட அரசாணையில் உத்திரவிடப்பட்ட வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் 100% ற்கு மிகாமல் என்பதை தற்போது 50 ற்கு மிகாமல் சொத்துவரி உயர்வு செய்திட திருத்திய உத்திரவு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. பதிவு செய்யலாம்
2. அரசாணையின்படி 01.04. 2018 -ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு செய்திட அனுமதிக்கலாம். (ந.க.எண்.1707/2017/அ1)

4.அரசு ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்: 19.07.2018 மற்றும் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 26.07.2018 -ல் 01.04.2018-ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு (Revision 2018) மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் 16.8.2018-ம் தேதிய சொத்துவரி சீராய்வு தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின்படி சொத்துவரி சீராய்வு தொடர்பான நாளிதழ் மற்றும் மாவட்ட நாளிதழ், விளம்பர அறிவிப்பு மாஸ்டர் பதிவேடு ( Master Register) தயார் செய்தல், உரிய சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவங்கள் அச்சடித்தல், நகல் எடுத்தல், மற்றும் சிறப்பு அறிவிக்கை ( Special Notice) சொத்துவரி விதிப்பு தாரர்களுக்கு சார்வு செய்து மற்றும் இதர செலவினத்திற்கு உத்தேச செலவினமாக தொகை ரூ.2,00,000-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1214/2018/அ1)

5. இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம் அருகில் குப்பைகிடங்கில் உள்ள பழைய குப்பைகளை Bio - mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.221.00 இலட்சமும் Battery Operated Vehicle வாங்கும் பணிக்கு ரூ.18.00 இலட்சமும் மற்றும் Light Commercial Vehicle வாங்கும் பணிக்கு 5.60 இலட்சமும் மொத்தம் ரூ.244.60 இலட்சத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து 13.08.2018 அன்று நடைபெற்ற 7th State High Powered Committee -ல் தீர்மானிக்கப்பட்டுள்ள கூட்ட அறிக்கையின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் ந.க.எண். 22866/2018/ பி3/ நாள்: 20.08.2018ம் தேதிய கடிதத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | Revamping of existing dumped Garbage in Compost Yard through Bio - mining process at Bhavani Municipality | 221.00 |
| 2 | Supply and Delivery of Battery Operated Vehicle (10Nos) | 18.00 |
| 3 | Supply and Delivery of light commercial Vehicle (1No) | 5.60 |
| | Total | 244.60 |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. பணிகளை மேற்கொள்ளவும் நகராட்சி பங்கு தொகை செலவிற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

6. இந்நகராட்சிக்கு சொந்தமான செல்லியாண்டியம்மன் மார்க்கெட் கடைகளில் கடை எண். 5,6,8,9 கடைகள் 9 ஆண்டு குத்தகை காலம் 31.08.2018-டுடன் முடிவடைகிறது.

அரசாணை ( நிலை) எண். 92, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 03.07.2007-ன்படி குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிந்த பின்னர், குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில், தற்போதைய குத்தகை தாரருக்கு அவர் தொடர்ந்து நடத்திட விரும்பும் பட்சத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்கலாம் என்றும் அவர் ஒப்புக்கொள்ளவில்லையானால் அச்சொத்து பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடைகள் நேரில் ஆய்வு செய்யப்பட்டு measurement எடுக்கப்பட்டது கடை அளவு 6X8 ( 48.ச.அடி) ஆகும். இதன் தற்போதைய வாடகை ரூ930/- இதிலிருந்து 50% உயர்வு செய்து மறுமதிப்பீட்டு வாடகை ரூ.1500/- என கீழ்கண்ட விபரப்படி உயர்வு செய்யப்படுகிறது. மேற்கண்ட மதிப்பீட்டு வாடகைக்கு சேவை வரி ( GST) 18% ஆகும்.

கீழ்கண்டவாறு:

செல்லியாண்டியம்மன் மார்க்கெட் கடைகள்:

| வ.எண். | கடை எண். | தற்போதைய வாடகை | மறுமதிப்பீடு செய்யப்பட்ட வாடகை | சேவை வரி 18% | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 5 | 930/- | 1500/- | 270/- | 1770/- |
| 2 | 6 | 930/- | 1500/- | 270/- | 1770/- |
| 3 | 8 | 930/- | 1500/- | 270/- | 1770/- |
| 4 | 9 | 930/- | 1500/- | 270/- | 1770/- |

மேற்கண்டபடி மறுமதிப்பீட்டு வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 2331/2016/அ)

(ஒம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பவானி நகராட்சி

**வருகின்ற 2018-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

1.இந்நகராட்சிக்கு துாய்மை இந்தியா திட்டம் 2018-19 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் Battery Operator Vehicle 10 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு ரூ.18.00 இலட்சமும், Light Commercial vehicle 1 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு ரூ.5.60 இலட்சத்திற்கு புதிய பேருந்து நிலையம் அருகில் குப்பை கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை Bio mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.221 இலட்சமும் மொத்தம் மூன்று பணிகளுக்கு ரூ.244.60 இலட்சத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண். 22866/பி3/2018, நாள்: 23.08.2018 தேதிய கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிர்வாக அனுமதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.244.60 இலட்சத்தில் மத்திய அரசு பங்குத் தொகை 35% (ரூ.85.61 இலட்சம் ) மாநில அரசு பங்குத் தொகை 55% (ரூ.134.53 இலட்சம்) நகராட்சிப் பங்குத் தொகை 10% (ரூ.24.46 இலட்சம் ) பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Purchase of Battery Operator Vehicle as per specification (10Nos) | 18.00 |
| 2 | Purchase of Light Commercial Vehicle as per specification (1No) | 5.60 |
| 3 | Reclamation of existing dump yard located at Compost yard Near new bus stand in ward no. 4 by removing the legacy waste of 33556 CU.M in Bhavani Municipality | 221.00 |
| | **Total** | **244.60** |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. பணிகளை மேற்கொள்ளவும் நகராட்சிப்பங்குத் தொகை 10% (ரூ.24.46 இலட்சம்) பொது நிதியின் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.557/2018/இ)

2. ஈரோடு மாவட்டம் , பவானி நகராட்சியில் பல்லுயிர் பன்மியச்சட்டம் ( மத்திய சட்டம்) 2002 மற்றும் பல்லுயிர் பன்மிய விதிகள் 2004 மற்றும் 2017-ம் வருடத்திய தமிழ்நாடு பல்லுயிர் பன்மிய விதிகள் ஆகியவற்றால் தொகுத்தளிக்கப்ட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கிணங்க, இந்நகராட்சியில் தனித்துவமிக்க - தாவரங்கள் மற்றும் பல்லுயிர்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக பின்வரும் உறுப்பினர்களை கொண்ட பல்லுயிர் பன்மிய மேலாண்மைக்கு தோற்றுவிக்கலாம்.

திரு.க./கதிர்வேல், பி.இ.,
தனி அலுவலர்(ம) ஆணையாளர்(பொ)

குழு உறுப்பினர்கள்:

1. தலைவர், ரோட்டரி சங்கம் , பவானி
2. திருமதி. எம். மஹாலட்சிமி, பவானி
3. திருமதி. கே. தங்கமணி, பவானி
4. திரு. கே. சீனிவாசன், பாவனி
5. திரு. பி. தங்கராஜ், பவானி
6. A.K.ராஜசேகரன், பவானி

மேற்காணும் விபரப்படி பல்லுயிர் பன்மிய மேலாண்மை குழு தோற்றுவித்து செயல்படுத்திட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம் (ந.க.எண்.1321/2018/ எச்1)

3. இந்நகராட்சியில் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ள வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் 60 துப்புரவுப்பணியாளர்களும், பள்ளி கழிவறைகள் சுத்தம் செய்யும் பணிக்கு 15 துப்புரவுப்பணியாளர்களும் மற்றும் டெங்கு ஒழிப்பு பணிக்கு 35DBC பணியாளர்களும் ஒப்பந்ததாரர் மூலம் பணியாளர்கள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஒப்பந்ததொழிலாளர் விதிகள் 1975 ன் படி மேற்காணும் முறைப்படி தொழிலாளர்களை கொண்டு பணி அமர்த்தி பணி செய்யும் செயல்களுக்கு பணியினை வழங்கும் நிறுவனம் ( Principle Employer) தொழிலாளர் உதவி ஆணையர் ( அமலாக்கம் ) அவர்களிடமிருந்து ஒப்பந்த உரிமம் பெறவேண்டி உள்ளது. இதற்கு துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கு ரூ.5000/- மற்றும் பள்ளிகழிவறைகள் சுத்தம் செய்தல் பணிக்கும் DBC பணிக்கும் தலா ரூ.2500/- ஆக ரூ. 10000/- தொழிலாளர் அவர்களுக்கு செலுத்தி உரிமம் பெற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1322/2018/ எச்1)

4. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் தலைமை நீரேற்று நிலைய உதவியாளராக பணிபுரியும் திரு. எஸ். நல்லசாமி என்பவர் இவ்வலுவலக செயல்முறை ந.க.எண். 776/2018/சி1, நாள்: 31.05.2018-ன்படி மிகையாக வழங்கப்பட்ட ஊதியத்தினை பிடித்தம் செய்வது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் WP No. 19185/2018ன்படி நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கினை நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி. ஸ்ரீனிவாஸ் அவர்கள் ஆஜராகி நடத்தி வருகிறார். மேற்கண்ட வழக்கிற்கு வழக்கு கட்டணம் ரூ.15000/-வழங்குமாறு திரு.பி. ஸ்ரீனிவாஸ் வழக்கறிஞர் அவர்கள் தனது 06.08.2018 ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். எனவே வழங்கு கட்டணம் ரூ. 15000/-ஐ வழக்கறிஞர் திரு. பி. ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவுத் தொகை ரூ. 15000/-ஐ குடிநீர் நிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.776/2018/ சி1)

(ஒம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பவானி நகராட்சி

**2018-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு பவானி நகர்மன்றத்தின் சாதாரண கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் கூட்டப்பொருட்கள் விபரம்**

1. அரசாணை (நிலை) எண். 92 நாள்: 03.07.2007-ன்படி நகராட்சி கடைகளுக்கு 9ஆண்டு குத்தகை காலம் முடிவடைந்த பின்னர் வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட்டும், தற்போதைய குத்தகைதாரர் திருத்தியமைக்கப்பட்ட வாடகையை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவை நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்லியாண்டியம்மன் மார்க்கெட் கடைகளில் 5,6,8,9-ன் தற்போதைய குத்தகைதாரர்கள் புதிய வாடகையை ஒப்புக் கொண்டு தொடர்ந்து கடையை நடத்துவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். எனவே, கீழ்கண்ட நபர்களுக்கு உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | கடை எண். | பெயர் | மாத வாடகை | 12மாத வாடகை வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 5 | திருமதி. உதயகுமாரி | 1500/- | 18000/- |
| 2 | 6 | திருமதி. பர்வதம் | 1500/- | 18000/- |
| 3 | 8 | எஸ்.ராஜேஸ்வரி | 1500/- | 18000/- |
| 4 | 9 | திரு. ஈஸ்வரன் | 1500/- | 18000/- |

அரசாணை 92, நாள்: 03.07.2007-ன்படி நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை விடப்படலாம். மூன்றாண்டு கொண்ட ஒரு தொகுப்பு காலஅளவு முடிவடைவதன் பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை 15% உயர்த்தப்படும். மூன்றாண்டுக்கு ஒருமுறை குத்தகையை புதுப்பிக்க கட்டணம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளின்படி உத்திரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 2331/2016/அ2)

2.தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட தகவல், கல்வி, தொடர்பு பணி போன்றவற்றை மேற்கொள்ள ஏற்கனவே நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஆள்வெளிக்கொணர்வு முகமை மூலம் இந்நகராட்சிக்கு பரப்புரையாளர் 7பேர் மற்றும் மேற்பார்வையாளர் ஒருவர் என்ற அடிப்படையில் sky man power agencies, திண்டுக்கல் நிறுவனத்தினர் மூலம் 31.08.2018-ம் தேதி வரை பணியாளர்களை வழங்கிட உத்திரவிடப்பட்டு அந்நிறுவனத்திடமிருந்து பணியாளர்கள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக, ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 26458/2016/ தி1, நாள்: 31.07.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேற்படி பணிக்காலத்தை 01.09.2018 ஆம் தேதியிலிருந்து 30.11.2018-ம் தேதி முடிய மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து அப்பணியாளர்களை தொடர்ந்து பயன்படுத்தி பணி மேற்கொள்ளுமாறும், அதற்காக செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட்டு பின்பு திட்ட நிதியிலிருந்து தொகை பெறப்பட்டவுடன் அதனை சரிசெய்து கொள்ளுமாறும் தெரிவித்துள்ளதால் மேற்படி பணியாளர்களை 30.11.2018 வரை பயன்படுத்தி பணி மேற்கொள்வதற்கும் அதற்கான பட்டியல் தொகை பொது நிதியிலிருந்தும் வழங்குவதற்கும், திட்ட நிதியிலிருந்து தொகை வரப்பெற்றவுடன் அதனை சரிசெய்து கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: அனுமதி வழங்கலாம்.

3. அரசு ஆணை எண். 73( ms) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 19.07.2018 மற்றும் அரசாணை எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 26.7.2018-ன்படி 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 20.08.2018 தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர்1) யின் சொத்துவரி பொதுச்சீராய்வு தொடர்பான வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி, இந்நகராட்சியின் மண்டலங்கள் மறுசீராய்வு ( Rezoning) செய்யப்பட்டது. இவ்வலுவலகத்தில் உள்ள அலுவலர்களைக் கொண்டு குழு அமைத்து, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் உள்ள வீதிகளில் மேம்பாடு அடைந்துள்ள ( improvement) விதிகளை தரம் உயர்த்தி Rezoning செய்யப்பட்டது. மேலும் D Zone -ல் உள்ள வீதிகளை B மற்றும் C மண்டலங்களில் சேர்க்கப்பட்டு ABC என மூன்று மண்டலங்களாக Rezoning செய்யப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(A - மண்டலம் )

| வ. எண். | வார்டு எண். | தெருக்களின் பெயர் | ஏற்கனவே இருக்கும் மண்டலம் | தற்போது 1.4.2018 முதல் நடைமுறைப் படுத்தப்பட்ட மண்டலம் | கதவு எண். |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | மெயின்ரோடு | A | A | 434 முதல் 569 |
| 2 | 4 | காமராஜ் நகர் -2 ( பெருமாள்புரம் ) | B | A | 1 முதல் 95 |
| 3 | 4 | காமராஜ் நகர் ( பெருமாள்புரம் ) | B | A | 96 முதல் 117 |
| 4 | 4 | மெயின்ரோடு | A | A | 354 முதல் 631 |
| 5 | 8 | அந்தியூர் ரோடு | A | A | 1 முதல் 308 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 8 | அந்தியூர் ரோடு | B | A | இத்தெருவில் உள்ள வரி விதிப்பு எண்கள் A மண்டலத்தில் சேர்க்கப்பட்டு B மண்டலம் நீக்கம் செய்யப்படுகிறது. |
| 7 | 10 | பழனியாண்டவர் கோவில் வீதி | A | A | 146 முதல் 187 |
| 8 | 10 | பாவடி வீதி | A | A | 1 முதல் 47 |
| 9 | 11 | மெயின்ரோடு | A | A | 319முதல்353, 632முதல் 796 |
| 10 | 14 | பழனியாண்டவர் கோவில் வீதி | A | A | 80முதல் 142, 189 முதல் 255 |
| 11 | 14 | மெயின்ரோடு | A | A | 236 முதல் 317, 804 முதல் 877 |
| 12 | 21 | மேற்கு கன்னார வீதி | A | A | 1 முதல் 33 |
| 13 | 21 | கிழக்கு கன்னார வீதி | A | A | 1 முதல் 32 |
| 14 | 21 | பழனியாண்டவர் கோவில் வீதி | A | A | 1 முதல் 79, 256 முதல் 296 |
| 15 | 21 | மெயின் ரோடு | A | A | 158 முதல் 235, 879 முதல் 950 |
| 16 | 22 | பஜனைகோவில் வீதி | A | A | 1 முதல் 42 |
| 17 | 24 | பஸ் ஸ்டேண்ட் ரோடு | A | A | 45 முதல் 59 , 200 முதல் 351 |
| 18 | 26 | பழைய பஸ் ஸ்டேண்ட் ரோடு | A | A | 31 முதல் 43, 352 முதல் 374 |
| 19 | 26 | பூக்கடை வீதி | A | A | 1 முதல் 45 |
| 20 | 26 | மெயின் ரோடு | A | A | 92 முதல் 157, 951 முதல் 1010 |
| 21 | 27 | மெயின் ரோடு | A | A | 1 முதல் 191 , 1015 முதல் 1080 |

**(B மண்டலம்)**

| வ. எண். | வார்டு எண். | தெருக்களின் பெயர் | ஏற்கனவே இருக்கும் மண்டலம் | தற்போது 1.4.2018 முதல் நடைமுறைப் படுத்தப்பட்ட மண்டலம் | கதவு எண். |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | சொக்கராயன்காடு - 2 | D | B | 1 முதல் 149, 356முதல் 467 |
| 2 | 2 | காமராஜ் நகர் முதல் வீதி | B | B | 1 முதல் 255 |
| 3 | 3 | வர்ணபுரம் 5வது ரோடு (அண்ணா நகர் ) | B | B | 1 முதல் 333 |
| 4 | 4 | வர்ணபுரம் 3வது ரோடு | B | B | 1 முதல் 112 |
| 5 | 4 | வர்ணபுரம் 4வது ரோடு | B | B | 1 முதல் 155 |
| 6 | 5 | வர்ணபுரம் 2வது ரோடு | B | B | 1 முதல் 96. |
| 7 | 5 | வர்ணபுரம் முதல் ரோடு | B | B | 1 முதல் 72 |
| 8 | 5 | வர்ணபுரம் முதல் வீதி | B | B | வர்ணபுரம் முதல் வீதியில் உள்ள கதவு எண்கள் வர்ணபுரம் முதல் ரோட்டில் சேர்க்கப்பட்டுள்ளதுவர்ணபுரம் முதல் வீதி 01.4.2018 நீக்கம் செய்யப்படுகிறது. |
| 9 | 5 | வர்ணபுரம் 2வது வீதி | B | B | வர்ணபுரம் முதல் வீதியில் உள்ள கதவு எண்கள் வர்ணபுரம் முதல் ரோட்டில் சேர்க்கப்பட்டுள்ளது வர்ணபுரம் முதல் வீதி 01.4.2018 நீக்கம் செய்யப்படுகிறது. |
| 10 | 5 | குருநாதன் ரோடு | B | B | 1 முதல் 303 |
| 11 | 6 | வர்ணபுரம்5வது ரோடு | B | B | 1 முதல் 234 |
| 12 | 6 | மீனாட்சி கல்யாண மண்டபம் ரோடு | B | B | 1முதல் 185 |
| 13 | 7 | திருவள்ளுவர் நகர் எக்ஸ்டன்சன் | D | B | 1 முதல் 79 |
| 14 | 8 | சோமசுந்தரபுரம் | B | B | 1 முதல் 107 |
| 15 | 9 | பழனிபுரம் 2வது ரோடு | B | B | 1முதல் 22 |
| 16 | 9 | பழனிபுரம் 7வது ரோடு | B | B | 1 முதல் 54 |
| 17 | 9 | பழனிபுரம் 6வது ரோடு | B | B | 1 முதல் 85 |
| 18 | 9 | பழனிபுரம் 5வது ரோடு | B | B | 1முதல் 60 |
| 19 | 9 | பழனிபுரம் 3வது ரோடு | B | B | 1 முதல் 92 |
| 20 | 9 | பழனிபுரம் 4வது ரோடு | B | B | 1முதல் 184 |
| 21 | 10 | பழனிபுரம் முதல் ரோடு | B | B | 1முதல் 311 |
| 22 | 11 | தேவபுரம் | B | B | 1முதல் 258 |
| 23 | 12 | வாரச்சந்தை ரோடு | B | B | 1முதல் 24, 80 முதல் 129 |
| 24 | 13 | காவேரி வீதி | B | B | 177 முதல் 220 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | 13 | வாரச்சந்தை ரோடு | B | B | 25 முதல் 79 |
| 26 | 13 | பசுவேஸ்வரர் வீதி | B | B | 1முதல்70,<br>271 முதல் 406 |
| 27 | 14 | சிவஞானம் சந்து | B | B | 1 முதல் 43 |
| 28 | 14 | தானா சாவடி சந்து | B | B | 1 முதல் 30 |
| 29 | 14 | தேவராஜன் சந்து | B | B | 1 முதல் 74 |
| 30 | 15 | மண்தொழிலாளர்3வது ரோடு | B | B | 54 முதல் 146 |
| 31 | 15 | திருநீலகண்டர் வீதி | B | B | 1 முதல் 285 |
| 32 | 17 | மண் தொழிலாளர் முதல் ரோடு | C | B | 1முதல் 330 |
| 33 | 18 | கல் தொழிலாளர் 2வது ரோடு | C | B | 1 முதல் 63 |
| 34 | 18 | பழைய பஞ்சாயத்து ஆபிஸ் ரோடு | B | B | 26 முதல் 92 |
| 35 | 18 | கல் தொழிலாளர் முதல் ரோடு | C | B | 1முதல் 227 |
| 36 | 19 | ராயல் தியேட்டர் 2வது ரோடு | C | B | 165 முதல் 265 |
| 37 | 19 | கல் தொழிலாளர் 3வது ரோடு | C | B | 1 முதல் 197 |
| 38 | 20 | சீனிவாசபுரம் கால்நடை மருத்துவமனை ரோடு | B | B | 1முதல் 44 |
| 39 | 20 | பழைய பஞ்சாயத்து ரோடு | B | B | 15 முதல் 25,<br>93 முதல் 104 |
| 40 | 20 | சீனிவாசபுரம் 2வது ரோடு | B | B | 1முதல் 75 |
| 41 | 20 | ஜோதி விநாயகர் கோவில் வீதி | B | B | 1முதல் 157 |
| 42 | 21 | மாரியம்மன் கோவில் வீதி | B | B | 1முதல் 30 |
| 43 | 21 | பழனி ஆண்டவர் கோவில் சந்து | B | B | 1முதல் 69 |
| 44 | 22 | காவேரி வீதி | B | B | 135 முதல் 174,<br>222 முதல் 277 |
| 45 | 23 | காவேரி விதி | B | B | 73 முதல் 134,<br>278 முதல் 321 |
| 46 | 24 | பழைய பஸ் ஸ்டேண்ட் ரோடு | B | B | இத்தெரு நீக்கம் செய்யப்பட்டு பஸ் ஸ்டேண்ட் ரோடு (60-199) -ல் சேர்க்கப்பட்டுள்ளது |
| 47 | 24 | பழைய பஞ்சாயத்து ரோடு | B | B | 1 முதல் 14,<br>105 முதல் 125 |
| 48 | 24 | மக்கான் வீதி | C | B | 1முதல் 61 |
| 49 | 24 | ராயல் தியேட்டர் முதல் வீதி | **B** | B | 1முதல் 55 |
| 50 | 24 | பஸ் ஸ்டேண்ட் ரோடு ( 60-199) | C | B | 60 முதல் 199 |
| 51 | 25 | சீனிவாசபுரம் எக்ஸ்டன்சன் | B | B | 1முதல் 161 |
| 52 | 25 | ராயல் தியேட்டர் 2வது ரோடு | B | B | 1முதல் 302 |
| 53 | 26 | கீரைக்கார வீதி | C | B | 1முதல் 59 |
| 54 | 27 | காவேரி வீதி | B | B | 1முதல் 172,<br>322 முதல் 504 |

(C - மண்டலம்)

| வ. எண். | வார்டு எண். | தெருக்களின் பெயர் | ஏற்கனவே இருக்கும் மண்டலம் | தற்போது 1.4.2018 முதல் நடைமுறைப் படுத்தப்பட்ட மண்டலம் | கதவு எண். |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | சொக்காராயன்காடு - 1 | D | C | 150 முதல் 355 |
| 2 | 7 | திருவள்ளுவர் நகர் | D | C | 1 முதல் 274 |
| 3 | 12 | மகாத்மாகாந்தி ரோடு | D | C | 1 முதல் 108 |
| 4 | 12 | நந்தனார் வீதி | D | C | 1 முதல் 169 |
| 5 | 16 | மண் தொழிலாளர் 3வது ரோடு | C | C | 1முதல் 52 |
| 6 | 16 | மண் தொழிலாளர் 2வது சந்து | C | C | 1முதல் 83 |
| 7 | 16 | மண் தொழிலாளர் 2வது ரோடு | C | C | 1முதல் 182 |
| 8 | 17 | மண் தொழிலாளர் முதல் சந்து | C | C | 1முதல் 33 |
| 9 | 22 | பசுவேஸ்வரர் வீதி | C | C | 154முதல் 270 |
| 10 | 23 | தந்தை பெரியார் வீதி | C | C | 1முதல் 120 |
| 11 | 23 | கீரைக்கார வீதி | C | C | 1முதல் 110 |
| 12 | 26 | பாலக்கரை வீதி | D | C | 1முதல் 78 |

D- மண்டலத்தில் உள்ள கீழ்க்கண்டுள்ள வீதிகள் தற்போது பி மற்றும் சி மண்டலங்களில் சேர்க்கப்பட்டுள்ளது,

| வ. எண். | வார்டு எண். | தெருக்களின் பெயர் | ஏற்கனவே இருக்கும் மண்டலம் | தற்போது 1.4.2018 முதல் நடைமுறைப் படுத்தப்பட்ட மண்டலம் | கதவு எண். |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | சொக்காராயன்காடு - 1 | D | C | 150 முதல் 355 |
| | 1 | சொக்காராயன்காடு - 2 | D | B | 1 முதல் 149, 356 முதல் 467 |
| 2 | 7 | திருவள்ளுவர் நகர் எக்ஸ்டன்சன் | D | B | 1முதல் 79 |
| 3 | 7 | திருவள்ளுவர் நகர் | D | C | 1 முதல் 274 |
| 4 | 12 | மகாத்மா காந்தி ரோடு | D | C | 1 முதல் 108 |
| 5 | 12 | நந்தனார் வீதி | D | C | 1முதல் 169 |
| 6 | 26 | பாலக்கரை வீதி | D | C | 1முதல் 78 |

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (1214/2018/அ1)

4. சொத்துவரி பொது சீராய்வு 01.04.2018 முதல் அமல் படுத்துதல் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20555/2018/ஆர்1 நாள்: 21.08.2018 -ம் தேதி கடிதத்தில் இணைத்து வரப்பெற்ற கலந்தாய்வு கூட்ட வழிகாட்டுதலின்படி இந்நகராட்சியில் ஏற்கனவே உள்ள நான்கு ( A,B,C,D) மண்டலங்களை மூன்று ( A,B,C) மண்டலங்களாக பிரித்து பட்டியல் தயார் செய்யப்படுகிறது கீழ்கண்ட விபரப்படி மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| 2008- சொத்துவரியின் படி மண்டலம் | பொது சீராய்வு மதிப்பு ரூ. | 2018 - சொத்துவரி பொது சீராய்வின் படி மாற்றம் செய்யப்பட்டுள்ள மண்டல மதிப்பு(ச.அடி1க்கு) | |
|---|---|---|---|
| மண்டலம் | மதிப்பு.ரூ | மண்டலம் | மதிப்பு ரூ. |
| A | 1.20 | A | 2.00 |
| B | 1.00 | B | 1.75 |
| C | 0.90 | C | 1.50 |
| D | 0.80 | D- மண்டலத்தில் உள்ள தெருக்கள் நீக்கம் செய்யப்பட்டு இதர மண்டலங்களில் சேர்க்கப்பட்டுள்ளது, | |

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 1214/2018/அ1)

5. பவானி நகருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காவேரி மற்றும் பவானி ஆற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் வழங்க மீனாட்சிகல்யாண மண்டபம் மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களுக்கு வர இருப்பதினால் அவர் வந்து செல்லும் நகராட்சி சாலைகளில் (1. தினசரி மார்க்கெட் சாலை, 2. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ரோடு (குருநாதன் ரோடு) 3. மீனாட்சி கல்யாண மண்டபம் ரோடு, 4. வர்ணபுரம் - 5வது வீதி) உள்ள பள்ளங்களை சீரமைக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2.பொது நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

6.பவானி நகராட்சி பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வந்து செல்லும் சாலைகளில் உள்ள பள்ளங்கள் சீரமைத்தல் பணிக்கு தொகை. ரூ.10000/- க்கு தனி அலுவலர் அவர்கள் 16.08.18 அன்று முன் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 17.08.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது,

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.எம்.அப்புசாமி | ரூ.9800/- |
| 2 | திரு. எஸ். பாலசுப்பிரமணியன் | ரூ.10700/- |
| 3 | திரு. எம்.எஸ். குருசாமி | ரூ.11,500/- |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளித் தொகை ரூ.9800/- க்கு விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எம். அப்புசாமி அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

7. பவானி நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் கணிணி பிரிண்டரில் உள்ள டோனர்கள் தீர்ந்துள்ளதனால் பிரிண்ட் அவுட் எடுக்க சிரமமாக உள்ளதனால் டோனர்களை ரீபில் செய்ய வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.5000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுநிதியில் செலவை மேற்கொள்ளலாம்.

8. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17018/2018/குவ1, நாள்: 23.08.2018 கடிதத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 -ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 34, அறிவிப்பு எண்.14-ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் ( Automatic vending centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி குடிநீர் திட்டம் மற்றும் பொது கிணற்றின் நீரை ஆதாரமாக கொண்டும் தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர்ச்சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு 20லிட்டர் குடிநீர் ரூ.7.00/-ற்கு அதாவது ஒரு லிட்டர் 35 பைசா என்ற விலையில் சாதாரண குடிநீர் மற்றும் குளிர்ந்த குடிநீர் ஒரு லிட்டர் ரூ.2.00/- விலையிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் ( Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்களுடன்/ தொழில் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை

பெற்று ( Corporate Social Responsibility Fund ) செயல்படுத்தவும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக ( Expression of Interest ) விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தின் தேர்வு செய்து மேற்கொள்ளுமாறு கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி கீழ்கண்ட இடங்களில் Automatic Vending Centers அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண். | தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | 2 | காமராஜ் நகர் OHT இடம் |
| 2 | 4 | புதிய பேருந்து நிலையம் |
| 3 | 5 | நகராட்சி அலுவலக வளாகம் |
| 4 | 9 | பழனிபுரம் 4வது வீதி பூங்கா இடம் |
| 5 | 10 | நகராட்சி வடக்குபள்ளி |
| 6 | 11 | தேவபுரம் சிறுவர் விளையாட்டு மைதானம் |
| 7 | 12 | தினசரி சந்தை |
| 8 | 19 | கல்தொழிலாளர் வீதி OHT இடம் |
| 9 | 20 | சீனிவாசபுரம் அனுசுயா மருத்துவமனை பின்புறம் |
| 10 | 24 | பழைய பேருந்து நிலையம் OHT இடம் |

மேற்கண்ட இடங்களில் Automatic Vending Centers அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

9. பவானி நகராட்சி தினசரி மார்க்கெட்டில் வடகிழக்கு பகுதியில் உள்ள கடைகளுக்கு மின்சார வசதி செய்யும் பணிக்கு தொகை. ரூ.0.60 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 186 நாள்: 09/7/2018 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 29.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது,

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.அப்புசாமி | 0.48% | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர். ஆர். என். & கோ | 1.21% | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.48% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1138/2018/இ1)

10. பவானி நகராட்சி வார்டு எண். 4 நீதிமன்றத்திற்கு தெற்குபுறம் உள்ள கால்வாய் தூர் வாருதல் மற்றும் சாலை சீரமைப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 141 நாள்: 28.05.2018 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 31.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது,

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.அப்புசாமி | 0.31% | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர். ஆர். என். & கோ | 1.29% | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.31% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 784/2018/இ1)

11. திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016-ல் ( பவானி நகராட்சி ) தெரிவிக்கப்பட்டுள்ளபடி வார்டு பகுதியில் தினமும் சேகரமாகும் குப்பைகளில் மக்கும் குப்பைகளை குப்பைகள் உருவாகும் இடத்திற்கு அருகாமையிலேயே பொருத்தமான முறையில் உரமாக்கப்பட செயலாக்கம் செய்வது சம்பந்தப்பட்ட நகராட்சியின் கடமையாகும் என உள்ளதால் இந்நகராட்சி பகுதியில் 7 இடங்கள் தேர்வு செய்து ஒவ்வொரு இடத்திலும் ISI தரச்சான்று பெற்றுள்ள 6X4X2 சைசிலான Multi Layared Cross Laminated Sheet லான Tarpalin(LDPE) Vermi Bed 2 வீதம் அமைத்து மக்கும் குப்பைகளை செயலாக்கம் செய்ய மன்றத்தின் ஒப்பதல் வேண்டப்படுகிறது.

7 இடங்களில் ஒவ்வொரு இடத்திற்கு தலா 2 எண்கள் Vermi Bed வீதம் 14 Vermi Bed வாங்கவும் ஒவ்வொரு Vermi Bed அமைக்கவும் தேவைப்படும் சவுக்கு (அ) மூங்கில் கம்பு அதாவது 7அடி நீளம் உள்ள மூங்கில் 2 No 5அடி நீளமுள்ள மூங்கில் 8 மற்றும் 3அடி நீளமுள்ள மூங்கில் 2 nos அனைத்து Vermi Bed ற்கும் தேவைப்படும் மூங்கில்கள் வாங்குவதற்கும் Tarpaulin 14 Nos வாங்குவதற்கும் மொத்தம் ஆகும் உத்தேச செலவினம் ரூ.35000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் ஒப்புதல் வழங்கலாம் (ந.க.எண்.1382/2018/எச்1)

12. பவானி நகராட்சி அலுவலக பொது பிரிவு நிர்வாகத்திற்கு தினசரி தட்டச்சு செய்தல் E - mail மற்றும் படிவங்கள் பிரிண்ட் எடுத்தல் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் பிரிண்ட்டர்கள் அவ்வப்போது சிறு,சிறு பழுதுகள் ஏற்படுகின்றன. இதனால் அவசர அத்தியாவசிய பணிகள் பாதிப்படையும் நிலை ஏற்படுவதை தவிர்க்க அருகிலே உள்ள பழுது சரிசெய்பவர்களை கொண்டு பழுது நிவர்த்தி செய்யும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதுபோன்று அவ்வப்போது ஏற்படும் சிறிய சிறிய செலவினத்திற்கும், அச்சமயம் கணிணி மற்றும் பிரிண்டர்களில் மாற்றப்படும் சிறுசிறு உதிரி பாகங்களுக்கு ஏற்படும் செலவினங்களை சரி செய்யும் பொருட்டு உத்தேச செலவினமாக ரூ.20,000/- ( சராசரி ஆண்டிற்கு) ஆகும். எனவே மேற்படி உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

மேலும் அவசர அவசியமாக பணி மேற்கொள்வதால் உடனுக்குடன் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு:

செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1919/2018/டி2)

13. பவானி நகராட்சியின் 2017-18 ஆம் ஆண்டு வருவாய், குடிநீர், மற்றும் கல்வி நிதி கணக்குகளை தனியார் மூலம் தயார் செய்ய ரூ.40,000/- செலவுத் தொகைக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 164/29.6.2018-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் 13.07.2018 அன்று வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1.திருவாளர்கள் | Sanjey Solutions | - | ரூ.40,000/- |
| 2. திருவாளர்கள் | Ozone Technologies | - | ரூ.60,000/- |
| 3. திருவாளர்கள் | Raj Solutions | - | ரூ.50,000/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த திருவாளர்கள் Sanjey Solutions நிறுவனத்தின் விலைப்புள்ளி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று திருவாளர்கள் Sanjey Solutions நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 482/2016/பி1)

14. பவானி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில், புதிதாக தெருவிளக்குகள் பொருத்தவும், இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><td>1</td><td>வார்டு எண்.1</td><td>சொக்கராயன் காடு ( அத்தப்ப கவுண்டர் லே அவுட்)</td><td>5 எண்ணிக்கை</td><td rowspan="3">15 Watts LED Lights</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண்.2</td><td>காமராஜ் நகர் முதல் வீதி</td><td>2 எண்ணிக்கை</td></tr>
<tr><td>3</td><td>வார்டு எண். 3</td><td>வர்ணபுரம் 5 வது வீதி அண்ணா நகர்</td><td>3 எண்ணிக்கை</td></tr>
<tr><td>4</td><td>வார்டு எண். 8</td><td>அந்தியூர் சாலை (பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அருகில் )</td><td>1 எண்ணிக்கை</td><td>150 Watts SVL</td></tr>
<tr><td>5</td><td>வார்டு எண். 17</td><td>மண் தொழிலாளர் முதல் வீதி</td><td>1 எண்ணிக்கை</td><td>15 Watts LED</td></tr>
</table>

அலுவலக குறிப்பு:
அனுமதிக்கலாம் (ந.க.எண்.1417/2018/இ1)

15.அரசு ஆணை எண். 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 19.07.2018 மற்றும் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 26.07.2018 நகராட்சி நிர்வாக சுற்றறிக்கை ந.க.எண். 20555/2018/RI, நாள்: 20.08.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டியின்படி இந்நகராட்சியில் ஏற்கனவே உள்ள சொந்த உபயோக குடியிருப்பு கட்டிடம், மற்றும் வாடகை குடியிருப்புக்கட்டிடங்களுக்கு 50% ம், வணிகம் மற்றும் தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கு 100% ம் உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், வாடகை அடிப்படையில் மத்திய மாநில அரசு அலுவலகங்கள் இயங்கும் தனியார் கட்டிடங்களுக்கு மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தனியார் கட்டிடங்களுக்கு வழங்கப்படும் ஆண்டு வாடகை மதிப்பில் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மத்திய மாநில அரசுக்கு சொந்தமான கட்டிங்களுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரி தொகையில் 50% க்கு உயர்வு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பிற்கு குடியிருப்புக்கான வாடகை மதிப்பில் 1 ½ மடங்கு அடிப்படை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பழைய கட்டிடங்களுக்கு சொத்துவரி சீராய்வு செய்யும் போது கட்டிடத்தின் வயதிற்கேற்பகீழ்கண்டவாறு கழிவு வழங்கி ( Depreciation) சொத்துவரி நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | ஆண்டுகள் | கழிவு விபரம் |
|---|---|---|
| 1. | 5 ஆண்டுகள் வரை | கழிவு இல்லை |
| 2. | 5 முதல் 15 ஆண்டுகள் வரை | 10% |
| 3. | 15 முதல் 25 ஆண்டுகள் வரை | 15% |
| 4. | 25 ஆண்டுகளுக்கு மேல் | 20% |

மேற்கண்ட வழிமுறைகளின்படி சொத்துவரி சீராய்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 1214/2018/அ1)

16. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 24, மக்கான் தெரு, விநாயகர் கோவில் அருகில் தார்சாலையில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதுபட்டுள்ளதனால், புதியதாக சிறுபாலம் கட்ட வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது நிதி 2018-19-ல் இருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

17. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித எண். 20555/2018/ஆர்1 நாள்: 20.08.2018-ன்படி சொத்துவரி பொதுச்சீராய்வு தொடர்பான வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி (Guideline) சொத்துவரி சுயமதிப்பீடு படிவங்கள் மற்றும் கணக்கீட்டு படிவங்கள் பிரிண்ட் செய்வதற்கு தமிழ்நாடு மல்படிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி மற்றும் ஈரோடு மாவட்ட அச்சுக்கூடம், ஈரோடு ஆகியவற்றிலிருந்து

கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | பெயர் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு மல்டிபர்பஸ் | 14200 | |
| | இன்ட்கோ திருச்சி | 14200 | 69035/- |
| 1. | ஈரோடு மாவட்ட கூட்டுறவு | | |
| | அச்சுக்கூடம் லிட், | 14200 | 52781.40/- |
| | ஈரோடு | 14200 | |

மேற்கண்ட அச்சுக்கூடங்களில் 2 வது வரிசையில் உள்ள ஈரோடு மாவட்ட கூட்டுறவு அச்சுக்கூடம் லிட், ஈரோட்டில் உள்ள தொகை குறைவாக இருப்பதால் மேற்கண்ட அச்சுக்கூடத்திற்கு உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1214/2018/அ1)

(ஓம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பவானி நகராட்சி

<u>மன்றப்பொருள்</u>

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம் அருகில் குப்பைகிடங்கில் உள்ள பழைய குப்பைகளை Bio - mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.221.00 இலட்சமும் Battery Operated Vehicle வாங்கும் பணிக்கு ரூ.18.00 இலட்சமும் மற்றும் Light Commercial Vehicle வாங்கும் பணிக்கு 5.60 இலட்சமும் மொத்தம் ரூ.244.60 இலட்சத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து 13.08.2018 அன்று நடைபெற்ற 7th State High Powered Committee -ல் தீர்மானிக்கப்பட்டுள்ள கூட்ட அறிக்கையின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் ந.க.எண். 22866/2018/ பி3/ நாள்: 20.08.2018ம் தேதிய கடிதத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. ( இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Revamping of existing dumped Garbage in Compost Yard through Bio - mining process at Bhavani Municipality | 221.00 |
| 2 | Supply and Delivery of Battery Operated Vehicle (10Nos) | 18.00 |
| 3 | Supply and Delivery of light commercial Vehicle (1No) | 5.60 |
| | Total | 244.60 |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. பணிகளை மேற்கொள்ளவும் நகராட்சி பங்கு தொகை செலவிற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகராட்சிப் பொறியாளர்
ஆணையாளர்(பொ)/தனிஅலுவலர்

பவானி நகராட்சி

## மன்றப்பொருள்

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018-19 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் Battery Operator Vehicle 10 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு ரூ.18.00 இலட்சமும், Light Commercial vehicle 1 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு ரூ.5.60 இலட்சத்திற்கு புதிய பேருந்து நிலையம் அருகில் குப்பை கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை Bio mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.221 இலட்சமும் மொத்தம் மூன்று பணிகளுக்கு ரூ.244.60 இலட்சத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண். 22866/பி3/2018, நாள்: 23.08.2018 தேதிய கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிர்வாக அனுமதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.244.60 இலட்சத்தில் மத்திய அரசு பங்குத் தொகை 35% (ரூ.85.61 இலட்சம் ) மாநில அரசு பங்குத் தொகை 55% (ரூ.134.53 இலட்சம்) நகராட்சிப் பங்குத் தொகை 10% (ரூ.24.46 இலட்சம் ) பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Purchase of Battery Operator Vehicle as per specification (10Nos) | 18.00 |
| 2 | Purchase of Light Commercial Vehicle as per specification (1No) | 5.60 |
| 3 | Reclamation of existing dump yard located at Compost yard Near new bus stand in ward no. 4 by removing the legacy waste of 33556 CU.M in Bhavani Municipality | 221.00 |
| | **Total** | **244.60** |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. பணிகளை மேற்கொள்ளவும் நகராட்சிப்பங்குத் தொகை 10% (ரூ.24.46 இலட்சம்) பொது நிதியின் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(

ந.க.எண்.557/2018/இ)

நகராட்சிப் பொறியாளர்
ஆணையாளர்(பொ)/தனிஅலுவலர்

பவானி நகராட்சி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 -ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 34, அறிவிப்பு எண்.14-ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கிணங்க பவானி நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் தன்னார்வ தொண்டுநிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடுபரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத்தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய்பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம் 27 வார்டுகளில் ரூ486 இலட்சம் (ரூபாய் நானூற்று எண்பத்தியாறு இலட்சம் ) ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்கதிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகரில் உள்ளஅனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள்(Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில்

முனைவோர்கள்CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும் இதற்கான அனுமதி நகரரட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் |
|---|---|---|
| 1 | 1 | சொக்கராயன் காடு |
| 2 | 2 | காமராஜ் நகர் OHT இடம் |
| 3 | 3 | வர்ணபுரம் 5வது வீதி |
| 4 | 4 | புதிய பேருந்து நிலையம் |
| 5 | 5 | நகராட்சி அலுவலக வளாகம் |
| 6 | 6 | மீனாட்சி கல்யாண மண்டபம் வீதி |
| 7 | 7 | திருவள்ளுவர் நகர் |
| 8 | 8 | சாவடி தெரு |
| 9 | 9 | பழனிபுரம் 4வது வீதி பூங்கா இடம் |
| 10 | 10 | நகராட்சி வடக்குபள்ளி |
| 11 | 11 | தேவபுரம் சிறுவர் விளையாட்டு மைதானம் |
| 12 | 12 | தினசரி சந்தை |
| 13 | 13 | பசுவேஸ்வரர் வீதி OHT அருகில் |
| 14 | 14 | டானா சாவடி சந்து |
| 15 | 15 | திருநீலகண்டர் வீதி |
| 16 | 16 | மண்தொழிலாளர் 3வது வீதி |
| 17 | 17 | அம்மன் நகர் |
| 18 | 18 | கல் தொழிலாளர் 3வது வீதி |
| 19 | 19 | கல் தொழிலாளர் வீதி OHT இடம் |
| 20 | 20 | சீனிவாசபுரம் அனுசுயா மருத்துவமனை பின்புறம் |
| 21 | 21 | கிழக்கு கண்ணார வீதி |
| 22 | 22 | காவேரி வீதி |
| 23 | 23 | காவேரி வீதி |

| | | |
|---|---|---|
| **24** | **24** | பழைய பேருந்து நிலையம் OHT இடம் |
| **25** | **25** | சீனிவாசபுரம் |
| **26** | **26** | கிழக்குப்பள்ளி அருகில் |
| **27** | **27** | கூடுதுறை ரோடு |

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.1390/2018/இ1)**

**.01.2019ஆம் தேதி கிழமை மாலை 5.00 மணிக்கு நடை பெற்ற நகர்மன்றத்தின்சாதாரண கூட்டத்தின் தீர்மானம் எண். ன் உண்மை நகல்**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு Battery Operated Vehicle வாங்கும் பணிக்கு ரூ.18.00 இலட்சமும் மற்றும் Light Commercial Vehicle வாங்கும் பணிக்கு 11.20 இலட்சமும் மொத்தம் ரூ.29.20 இலட்சத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து 19.12.2018 அன்று நடைபெற்ற 8th State High Powered Committee -ல் தீர்மானிக்கப்பட்டுள்ள கூட்ட அறிக்கையின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் ந.க.எண். 38984/2014/பி1/ நாள்: 11.01.2019 -ம் தேதிய கடிதத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. ( இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Supply and Delivery of Battery Operated Vehicle (10Nos) | 18.00 |
| 2 | Supply and Delivery of light commercial Vehicle (2No) | 11.20 |
| | Total | 29.20 |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. பணிகளை மேற்கொள்ளவும் நகராட்சி பங்கு தொகை செலவிற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மானம் எண். நாள்: .01.2019**

அலுவலக குறிப்பு: பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

(ஒம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர்
பவானி நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளருக்காக
பவானி நகராட்சி

**31.08.2018ஆம் தேதி வெள்ளிக்கிழமை கிழமை மாலை 5.00 மணிக்கு நடை பெற்ற நகர்மன்றத்தின்சாதாரண கூட்டத்தின் தீர்மானம் எண். ன் உண்மை நகல்**

பவானி நகராட்சி அலுவலக பொது பிரிவு நிர்வாகத்திற்கு தினசரி தட்டச்சு செய்தல் E - mail மற்றும் படிவங்கள் பிரிண்ட் எடுத்தல் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் பிரிண்ட்டர்கள் அவ்வப்போது சிறு,சிறு பழுதுகள் ஏற்படுகின்றன. இதனால் அவசர அத்தியாவசிய பணிகள் பாதிப்படையும் நிலை ஏற்படுவதை தவிர்க்க அருகிலே உள்ள பழுது சரிசெய்பவர்களை கொண்டு பழுது நிவர்த்தி செய்யும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதுபோன்று அவ்வப்போது ஏற்படும் சிறிய சிறிய செலவினத்திற்கும், அச்சமயம் கணிணி மற்றும் பிரிண்டர்களில் மாற்றப்படும் சிறுசிறு உதிரி பாகங்களுக்கு ஏற்படும் செலவினங்களை சரி செய்யும் பொருட்டு உத்தேச செலவினமாக ரூ.20,000/- ( சராசரி ஆண்டிற்கு) ஆகும். எனவே மேற்படி உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

மேலும் அவசர அவசியமாக பணி மேற்கொள்வதால் உடனுக்குடன் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு:

செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1919/2018/டி2)

**நகர்மன்ற தீர்மானம் எண். நாள்: 31.08.2018**

அலுவலக குறிப்பு: பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

(ஒம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர்
பவானி நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளருக்காக
பவானி நகராட்சி